+2 வணிகவியல் அரையாண்டுத்தேர்வு 2018-19
சரியான விடை
1.(இ) வரையறு முதல்
2.(இ) கூட்டுப்பங்கு நிறுமம்
3.(இ) ஒரு நபர் மட்டும் தேவை
4.(இ) 2
5.(ஆ) விருப்பத்தின் பேரில்
6.(ஆ) நிறுவனம்
7.(இ) 7
8.(அ) பட்டய நிறுமங்கள்
9.(அ) 2
10(இ) பொது வரையறு நிறுமங்கள்
11.(இ) இயக்குநரவையில்
12.(இ) 3
13.(ஆ) கரடி
14.(ஆ) நிதிப் பத்திரங்கள் வாங்கி விற்பது
15.(அ) 1995
16.(அ) 25
17.(இ) ஆதரவின் அடிப்படையில்
18.(ஆ) உறுப்பினர்களின் நன்மைக்காக இன்றியமையாத சேவையை நிர்வாகம் செய்வது
19.(ஆ) பொது கழகமாகும்
20.(அ) துறைவாரி அமைப்பு

ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி 7X2=14

21. அமைப்பு ஊர்விக் & ஹன்ட் - ஒரு வியாபார நிறுவனம் என்பது சமுதாயத்தின் மற்ற உறுப்பினர்களின் தேவைக்காக அளிக்கும் சக்தியை பெற்றுக்கொண்டு ஒரு பொருளையோ அல்லது சேவையையோ உற்பத்தி செய்து பகிர்ந்தளித்து செயல்படக்கூடிய அமைப்பாகும்.

22.. கூட்டு உருவாக்கம் பெறாத அமைப்புகள்: உரிமையும் நிர்வாகமும் **பிரிக்க முடியாமல் இருப்பது.** தனியாள்வணிகம், கூட்டாண்மை இந்துக் கூட்டுக் குடும்பம்

23. உழையாக் கூட்டாளி:இவ்வகை கூட்டாளிகள் தொழிலில் முதலிடுவர். ஆனால் தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறுவதில்லை. இவ்வகை கூட்டாளிகள் உறங்கும் கூட்டாளிகள் அல்லது உழையாக் கூட்டாளிகள் அல்லது முதலிடும் கூட்டாளிகள் என அழைக்கப்படுவர்.

24.அரசு நிறுமத்தின் மேலாண்மை. இயக்குநரவை இதனை மேலாண்மை செய்கிறது. தக்க வல்லமையும், அனுபவமும் வாய்ந்தவர்களையே அதன் இயக்குநர்களாக பெரும்பாண்மை பங்கு முதலைப் பெற்றிருக்கும் அரசு நியமிக்கும். தொழிலாளிகள், நுகர்வோர், அயல்நாட்டு கூட்டுவினையர் தொழில் நுட்ப வல்லுநர் போன்ற பல பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் தரும் வண்ணம் நிறுமத்தின் இயக்குநர்களை அரசு நியமிக்கும்.

25. சட்ட முறை நிறுமங்கள் நாடாளுமன்றத்தின் அல்லது மாநிலச் சட்ட மன்றங்களில் இயற்றப்படும் சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்படும் நிறுமங்கள் சட்டமுறை நிறுமங்கள் எனக் கூறப்படுகின்றன. எச் சட்டத்தின் கீழ் அவை அமைக்கப்படுகிறதோ, அச்சட்டம் அதன் செயல்பாட்டினைக் கட்டுப்படுத்தும். அதாவது இத்தகைய நிறுமத்திற்கென தனியான சட்டம் நிறைவேற்றப்பட்டு, அதன்கீழ் இந்நிறுமம் உருவாக்கப்படுகிறது.இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஆகியவை இவற்றுள்அடங்கும்.

26.பகராள் : நிறுமக்கூட்டத்தில் கலந்துகொள்ள உறுப்பினரால் நியமிக்கப்படும் ஒரு நபரை குறிக்கும். பகராளை நியமிக்கும் பத்திரத்தையும் கூட பகராள் எனும் சொல் உணர்த்தும்.

27. மேலாண்மை இயக்குநர் நிர்வாகத்தின் மிகு அதிகாரங்களைப் பெற்றிருக்கும் இயக்குநர், மேலாண்மை இயக்குநர் எனப்படுகிறார். அப்பதவியை அவர் வகிக்கவில்லையெனில் மேலாண்மை அதிகாரங்கள் அவருக்குக் கிடைக்காது. வழக்கமான, நடைமுறை நிர்வாகப் பணிகளை மேலாண்மையின் மிகு
அதிகாரங்கள் என்ற சொற்களில் அடக்கலாகாது.

28. பத்திரம்: ஒரு பத்திரம் என்பது ஒருவரின் உடைமை உரிமை அல்லது கடனீட்டு உரிமையை குறிக்கும் ஒரு சான்றிதழ் அல்லது ஆவணம் ஆகும். எ.கா. பங்குகள், கடனீட்டுபத்திரம்.

29.கூட்டுறவு பண்டகச்சாலை : அதிகமாக கிராமபுறங்களில் காணப்படும். விவசாயப் பொருட்களை சேமித்து வைக்கும் வசதியை உறுப்பினர்களுக்கு அளிக்கிறது. மேலும் முற்றுப் பெற்ற பொருட்களை சந்தையில் நல்ல விலை கிடைக்கும்வரை சேமித்து வைக்க உதவுகிறது.

30.அரசுத் தொழில்களை எவ்வகையில் உருவாக்கலாம்: அரசே முதலீடு செய்து புதிய தொழில் நிறுவனங்களை அமைத்து மேலாண்மை செய்யலாம். ஏற்கனவே தனியார் துறையில் இயங்கி வரும் வணிக அமைப்புகளை நாட்டுடைமையாக்கி செயல்படுத்தலாம்.

ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி 7X3=21

31. முரண்தடைக் கூட்டாளி ஒரு தொழிலில் ஒருவர் உண்மையிலேயே கூட்டாளியாக இல்லாமலிருந்து, தன் நடத்தையின் மூலம் தானும் அத்தொழிலில் ஒரு கூட்டாளி என்று வெளியாரை நம்பசெய்த பின் தான் கூட்டாளி அல்ல என்று பின்னர் அவர் மறுத்துக்கூறமுடியாது. அவ்வாறு நம்பி நிறுவனத்திற்கு முன் பணம் அளிப்பவருக்கோ அல்லது நிறுவனத்தோடு ஒப்பந்தத்தில் ஈடுபடுவருக்கோ அவர் பொறுப்பாகிறார். அத்தகைய நபரே முரண்தடைக் கூட்டாளி என்றழைக்கப்படுகிறார்.

32. தனி நபர் வணிகத்தின் குணாதிசயங்களை பட்டியலிடுக:1)தனிநபர் உரிமையும் கட்டுபாடும் 2) மூலதனம் 3)வரையறாபொறுப்பு 4)இலாபநட்டம் 5)சட்டத்தனித்துவமின்மை 6.தனிச்சட்டம்மில்லை 7)பதிவு 8)வாழ்வு 9)எளிமை 10உள்ளூர்வியாபாரம

33.கூட்டாண்மையில் இளவர்: 1.இளவர்கூட்டாளி என்பவர் 18வயது பூர்த்தி அடையாதவர். 2.சட்டப்படி இளவர் ஒப்பந்தத்தில் ஈடுபட தகுதியில்லாதவர். 3.ஆனால் கூட்டாண்மையின் பயனுக்காக அனைத்துக் கூட்டாளிகளும் ஒப்புக்கொண்டால் இளவர் கூட்டாளியாக முடியும்.

உரிமை வயதை அடையும் முன் :1) தொழிலின் சொத்திலும் இலாபத்திலும் பங்கு பெறும் உரிமை 2) நிறுவனக் கணக்குகளை பார்வையிட்டு அவற்றை நகல் எடுக்கும் உரிமை 3) தொழிலின் சொத்துகள் இலாபத்தில் அவருக்கு உள்ள பங்கு அளவிற்குமட்டும்அவருக்குப்பொறுப்புஆகும்.

உரிமை வயதை அடைந்த பின்: 1.உரிமை வயது அடைந்தபின்பு தொடா;ந்து கூட்டாளியாக இருக்க

வேண்டுமா அல்லது விலக வேண்டுமா என்பதை ஆறு மாதத்திற்குள் தீர்மானித்து முடிவை அறிவிக்க வேண்டும். **2.**அவ்வாறு ஆறு மாதத்திற்குள் அறிவிக்காவிட்டால் இளவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட நாள் முதல் நிறுவனக் கடன்களுக்குப் பொறுப்பாவார். 3) ஆறு மாதத்திற்குள் விலகுவதாக அறிவித்தால் அறிவித்த நாளிலிருந்து நிறுவனக்கடன்களுக்கு பொறுப்பாகமாட்டார்

34 பிடிப்பு நிறுமம் துணை நிறுமம்

ஒரு நிறுமம் வேறொரு நிறுமத்தின் 1. அனைத்து இயக்குநர்களை அல்லது பெரும்பான்மை இயக்குநர்களை நியமிக்கும் அல்லது நீக்கும் நிலையில் இருப்பின், அல்லது 2) வேறொரு நிறுமத்தின் நேர்மைப் பங்கு முதலில் 50 விழுக்காடுக்கு மேல் வைத்திருப்பின் அல்லது 3) வேறொரு நிறுமத்தில் உள்ள வாக்குகளில் 50 விழுக்காடுக்கு மேலான வாக்குகளைச் செலுத்தும் நிலையில் இருப்பின், அந்நிறுமம் பிடிப்பு நிறுமமாகும். இவ்வாறு கட்டுப்படுத்தப்படும் வேறொரு நிறுமம் துணை நிறுமம் எனப்படும்.

35. உள்நாட்டு நிறுமங்கள் நிறுமங்கள் சட்டம் 1956 அல்லது அதற்கு முன்னர் இருந்த சட்டங்களின் கீழ்ப்பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள் உள்நாட்டு நிறுமங்கள் என அழைக்கப் பெறுகின்றன.

36. ஒரு நிறுமத்தில் இயக்குநர் வகிக்கும் நிலைகள்: 1.இயக்குநர்களாக: நிறுமத்தின் ஒப்பந்தத்தில் ஈடுபடும் போது முகவர்களாக இயக்குநர்கள் செயல்படுகின்றனர். இயக்குநர்கள் தங்கள் செயல்களால் நிறுமத்தைக் கட்டுப்படுத்துகிறார். **2.பொறுப்பான்மையர்களாக :** நிறுமத்தின் சொத்துகளை நிர்வகிக்கும் பொழுது இயக்குநர்கள் பொறுப்பான்மையாளர்களாக செயல்படுகின்றனர்.அவ்வாரே அதிகாரங்களைப் பயன்படுத்தும்பொழுது அதே நிலையில் உள்ளனர். **3.அதிகாரிகளாக :** இயக்குநர்கள் நிறுமத்தின் அதிகாரிகள் போன்று செயல்படுகின்றனர்.நிறும மேலாண்மையில் ஈடுபடும் பொழுது அதன் முதன்னைச் செயலதிகாரிகள் போன்று செயல்படுகின்றனர்.

37. உட்கிடை ஆணையுரிமை பெற்ற ஒவ்வொரு கூட்டாளியும் நிறைவேண்டிய பணிகள் (ஏதேனும் 6) 1. நிறுவனத்திற்காக சரக்கு வாங்குதல், விற்றல் மற்றும் அடகு வைத்தல் 2. நிறுவனத்திற்கு சேர வேண்டிய பணத்தைப் பெறுதல் மற்றும் அதற்கு ரசீது வழங்குதல் 3. நிறுவனத்துடன் தொடர்பு கொண்டுள்ள நபர்களின் கணக்குகளைத் தீர்த்தல் 4. நிறுவனத்துக்குப் பணியாட்களை வேலைக்கமர்த்தல் 5. நிறுவனத்திற்காக கடன் வாங்குதல், கடனைத் திருப்பி அடைத்தல் 6. நிறுவனத்தின் பெயரில் மாற்றுமுறை ஆவணங்களைத் தயாரித்தல், ஏற்றல், உரிமையை மாற்றிக்கொடுத்தல் 7. நிறுவனத்தின் பொருட்டு நிறுவனப் பெயரில் வங்கிக் கணக்கு செயற்படுத்துதல் 8. நிறுவனத்துக்காகச் சட்ட நடவடிக்கை எடுத்தல், நிறுவனத்தின் பொருட்டு அத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிர் வழக்காடல்.

38. செபியின் செயல்பாடுகள் : செபி தன் கடமைகளை வெற்றிகரமாகச் செயல்படுத்துகிறது. முதலீட்டாளர்களின் பாதுகாப்பு, நிறும நிதி நிலவரங்களை வெளியிடுதல் குறித்து செபி வழிமுறைகளை வெளியிட்டுள்ளது. வர்த்தக வங்கிகளுக்கான வழிமுறைகளையும், பரஸ்பர நிதிகள் விளம்பரம் செய்வதில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் ஆகியவைகளையும் செபி வெளியிட்டுள்ளது. வெளியீட்டாளர்களின் நலன் காக்கும் பொருட்டு, செபி எண்ணற்ற வெளியீட்டாளர்களின் கூட்டமைப்பைப் பதிவு செய்திருக்கிறது. முதலீட்டாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பங்குச் சந்தை பற்றிய அறிவைக் கற்பிக்கவும் தொடர் விளம்பரங்களைச் செபி வெளியிட்டிருக்கிறது. பல சுயக் கட்டுப்பாடு நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

39. கூட்டுறவு அமைக்க பின்பற்ற வேண்டிய முறைகள் : கூட்டுறவு சங்கச் சட்டம் 1912ன் படி அல்லது மாநில கூட்டுறவு சங்கத்தின் படி ஒரு சங்கம் பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு ஊரைச் சேர்ந்த பொதுநலம் உள்ள ஏதேனும் 25 நபர்கள் கூடி கூட்டுறவுச் சங்கத்தை தோற்றுவிக்கலாம். கூட்டுறவுச் சங்கப்பதிவாளரிடம் சங்கம் அமைக்க இருக்கும் விருப்பத்தை விண்ணப்படிவ மூலம் தெரிவிக்க வேண்டும். அந்த விண்ணப்ப படிவத்திற்கு அமைப்பு முறையேடு என்று பெயர். அதில் சங்கத்தின் பெயரும், விலாசமும், நோக்கங்களும், முதல் உறுப்பினரின் பொறுப்பு ஆகியவற்றை குறிக்க வேண்டும். விண்ணப்பத்துடன் சங்கத்தின் துணை விதிகளையும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை இணைத்திருக்க வேண்டும். பதிவாளர் பத்திரங்களை முறையாக பரிசீலித்து அவை சட்டப்படி உள்ளனவா என்பதை ஆய்வு செய்வார். அவர் முழு திருப்தியடைந்தவுடன் சங்கத்தினுடைய பதிவேடுகளில் பதிந்த பின்பு கூட்டுருவாக்க பதிவு சான்றிதழைக் கொடுப்பார்.

40. துறைவாரி அமைப்பின் இயல்புகள்(ஏதேனும் 3)

1. தேவைப்படும் நிதி முழுவதையும் அரசே அளிக்கிறது. 2.இது அரசுக்கு முற்றும் கட்டுப்பட்டு இயங்குகின்றது. இத்துறைக்கென அமைச்சர் உண்டு. இந்நிறுவன வளர்ச்சி இயக்கம் குறைபாடுகள் பற்றி பாராளுமன்றத்திற்கும் சட்டப் பேரவைகளுக்கும் பதில் சொல்லும் கடமை அந்த அமைச்சகத்திற்கு உண்டு. 3.இதில் செங்குத்து அதிகார உறவு காணப்படுகிறது. 4.இதற்கு தேவைப்படும் நிதி பாராளுமன்ற அல்லது சட்டமன்ற நிதி அறிக்கையின் மூலம் ஒதுக்கப்படுகிறது. 5. இதன் வரவு - செலவுத் திட்டம் அரசின் கணக்குப்பதிவு முறை மற்றும் தணிக்கைக்கு உட்பட்டதாகும். 6. இது அரசின் பகுதி. எனவே அரசுக்குரிய சட்ட விலக்களிப்பு பெறுகிறது.

அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35

41.அ. பல்வகை தொழில் வடிவமைப்பு: 1) தனிவணிகம்: 2) இந்து கூட்டு குடும்பம்: 3) கூட்டாண்மை: 4)கூட்டு பங்கு நிறுமம்:. 5) கூட்டுறவு அமைப்பு: 6) பன்னாட்டு நிறுமங்கள்: **அரசு நிறுவனங்கள்: (1) துறைமுறை அமைப்பு:** இது அரசின் ஒரு பகுதி. தனி அமைச்சகத்தால் நிர்வாகம் செய்யப்படுகிறது. பொதுத்துறை அமைப்பில் மிகவும் பழமையானதாகும். இது மத்திய அரசாலோ, மாநில அரசாலோ

நடத்தப்படுவதாகும். (எ.கா) ரயில்வே, தொலைபேசி, தொலைக்காட்சி **(2) பொதுக் கூட்டுரு:** இது பாராளுமன்ற தனி சட்டம் மூலம் உருவாக்கப்படுவது. இது ஒரு சட்டமுறை கழகமாகும். இச்சட்டமே இதன் நோக்கம், அதிகாரங்கள், பணிகள் ஆகியவற்றை வரையறுக்கிறது. இது அரசின் நிதியுதவி பெறும் சுயாட்சி அமைப்பு இதன் முழு பங்கு முதலும் அரசாங்கத்தால் செலுத்தப்படுகிறது. இதன் நோக்கம் பொது மக்களுக்கு சேவை புரிவதாகும். (எ.கா) இந்திய ரிசர்வ் வங்கி, LIC UTI ஆகியவை **(3) அரசு நிறுமம்:** இந்திய நிறுமச்சட்டம் 1956ன்படி செலுத்திய பங்கு முதலில் 51% பங்குகளை மத்திய அரசோ, மாநில அரசோ அல்லது இரண்டுமோ சேர்ந்து முதலீடு செய்திருந்தால் அது அரசு நிறுமம் ஆகும். அரசு நிறுமங்கள் கலப்பு உரிமை நிறுமங்கள் எனவும் அழைக்கப்படுகிறது.. இதன் பணியாளர்கள் அரசு ஊழியர்கள் அல்லர் (எ.கா.) BHEL மாருதி உத்யோக் நிறுவனம் **(4) வாரிய அமைப்பு:** இந்த அமைப்பின் மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவிடம் உள்ளது. இது தனிச்சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. (எ.கா.) தமிழ்நாடு மின்சார வாரியம்,

41.ஆ. நிகழ்ச்சிக் குறிப்பு: நிறுமமொன்றின் பல்வகையான கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் எடுக்கப்பெற்ற முடிவுகளின் (தீர்மானங்களின்) உண்மையான, சரியான பதிவுகள்தான் நிகழ்ச்சிக் குறிப்பு எனப்படுகிறது. பொது மற்றும் இயக்குநரவைக் கூட்டங்களின் அனைத்து நடைமுறைகளின் சுருக்கத்தினை உள்ளடக்கிய நிகழ்ச்சிக் குறிப்பேட்டினை ஒவ்வொரு நிறுமமும் வைத்திருக்க வேண்டும். நிகழ்ச்சிக் குறிப்பு சுருக்கமாகவும் உண்மையானதாகவும் இருக்க வேண்டும். பொருள் வேறுபாட்டுக்கு இடங்கொடா வண்ணம் அது சரியானதாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வருணனை வார்த்தைகளற்றதாகவும் இருக்க வேண்டும். **நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் காணப்பெற வேண்டியவை.** 1) கூட்டத்தின் தன்மை. ஆண்டுப் பொதுக் கூட்டமோ, சிறப்புப் பொதுக்கூட்டமோ, (இயக்குநர்) அவைக் கூட்டமோ என்ற விவரம். 2) கூட்ட நாள், காலம், இடம் பற்றிய விவரம். 3) கூட்டத் தலைவர், இயக்குநர்கள், செயலர் ஆகியோர் பெயர்களும், வந்திருந்த உறுப்பினர்தம் எண்ணிக்கையும். 4) நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட வரிசையில், நடைபெற்ற நிகழ்ச்சிகளின் சுருக்கம். 5) கடந்த கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புக்கு இக்கூட்டத்தின் ஒப்புதல் 6) கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 7) கூட்டத் தலைவரின் கையொப்பம் (நாளுடன்)

42அ. சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கு: 1.நுகர்வோர் மன்னர்களாக மதிக்கப்படுகிறார்கள். 2. வியாபாரிகள் நுகர்வோரின் தேவைகள் விருப்பங்கள் எதிர்பார்புகள் ஆகியவற்றை பூர்த்தி செய்கின்றனர். 3. அன்றாடம் தேவைப்படும் உணவு வகைகள், துணிவகைகள், எழுதுபொருட்கள், மருந்து பொருட்கள், முதலியன தனி வணிகர் மூலம் நுகர்வோருக்கு அவர்கள் வாழும் இடத்திற்கு அருகாமையிலேயே கிடைக்கிறது. சமுதாயத்தின் தேவைகளை பூர்த்திசெய்வதோடு கீழ்காணும் வகையில் பணியாற்றுகிறது. 1.**வேலையில்லா பிரச்சனைக்கு தீர்வு:** குறைந்த கல்வியறிவு உடையவர்களுக்கும், கல்வியறிவு அற்றவர்களுக்கும் அவரவர் இடங்களிலேயே வேலையளித்து ஓரளவு வேலையில்லா பிரச்சனையை தீர்க்கிறது. 2.**முதலீட்டுக்கான வாய்ப்பு** சிறு முதலீட்டாளர்கள் குறைந்த முதலுடன் தொழில் தொடங்க வாய்பளிக்கிறது. முதலீட்டாளர்களின் சேமிப்புகளை உற்பத்திக்கு பயன்படுத்த உதவுகிறது.3.**குறைந்த விலையில் பொருட்களை அளித்தல்:** நிர்வாக செலவு குறைவு என்பதால் பொருட்களின் மீதான அதிகபட்ச விலையைவிட குறைவாகவே விற்பனை செய்வர்.4.**சிறு உற்பத்தியாளர்களுக்கு உதவுதல்:** உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் உள்ளூர் சிறு உற்பத்தியாளர்கள் பயன் பெறுகின்றனர்.5.**தரமான பெருட்களை அளித்தல்:** 1. தன் வியாபார நன்மதிப்பை காக்க உயர்ந்த தரமான பொருட்களையே விற்பனை செய்கிறார். 2. விற்ற பொருட்களில் குறையிருப்பின் அதை திரும்ப பெற்று வேறு நல்ல பொருளை திரும்ப தருகிறார். 3. நுகர்வோர் நலனில் அக்கறை கொள்கிறார். 6.**தர்ம சிந்தனையுள்ள நடவடிக்கைகள்:** தனி வணிகர்கள் தனியாகவோ குழுக்களாகவோ அமைத்து இலவச கண் சிக்சை முகாம், மருத்துவ முகாம், பூங்காக்களை பராமரித்தல், ஏழை மாணவர்களுக்கு இலவச சீருடை நோட்டு புத்தகங்கள், பள்ளிகளுக்கு அறைகலன்கள் வழங்குதல் போன்ற பல சமுதாய பணிகளை மேற்கொள்கிறார்கள். **7.வருமானம் மற்றும் வளங்களை சமமாக பகிர்ந்து அளித்தல்:** பலர் வியாபார உலகில் தனிவணிகராக ஈடுபட வாய்பளித்தால் வருமானம் மற்றும் வளங்களை சமமாக பகிர்ந்தளிக்க உதவுகிறது.8. **நுகர்வோருக்கு உதவுதல்:** நுகர்வோர் வீட்டு வாசலிலேயே பொருட்களை கிடைக்க செய்வதால், நுகர்வோரின் நேரமும், உழைப்பும் மிச்சமாகிறது.

42.ஆ. கூட்டாண்மை அமைப்பின் நன்மைகள்(5) -- 1. **அமைத்தல் எளிது -** கூட்டாண்மையை அமைப்பது எளிது. கூட்டுப்பங்கு நிறுமத்தில் சட்ட முறைப்படி பல ஆவணங்கள் தயார் செய்வது போல் கூட்டாண்மையில் இல்லை. கூட்டாண்மையைத் துவங்க கூட்டாளிகளிடையே ஒரு உடன்பாடே போதுமானது. 2. **பதிவு கட்டாயமில்லை -** கூட்டாண்மையை பதிவு செய்ய வேண்டிய கட்டாயமில்லை. அது கூட்டாளிகளின் விருப்பத்திற்க்குட்ப்பட்டது.3. **அதிக நிதி ஆதாரங்கள் -** ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் முதல் வழங்குவதால் தனிநபர் வணிகத்தைவிட அதிகமுதல் திரட்ட வாய்ப்பு உள்ளது. மேலும் கூட்டாளிகளின் பொறுப்பு, கூட்டு மற்றும் தனித்தனிவரையறாப் பொறுப்பு. . எனவே, கடன் பெறும் திறனும் அதிகமாவதால், அதிக முதல் திரட்டலாம்.இதனால் வியாபாரத்தை பல மடங்கு விரிவு படுத்தலாம். 4.**கூடுதல் மேலாண்மை திறன் -** கூட்டாளிகளின் திறமைக்கேற்ப பணிகள் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. எனவே பல்வேறு பணித்துறைகளையும் கூட்டாளிகள் மேற்பார்வையிட்டு கட்டுப்படுத்த முடியும். கூட்டாளிகளின் திறமை, மற்றும் தொழில் சார்ந்த அனுபவம் முதலியன வியாபார வளர்ச்சியை அதிகரித்து அதிக இலாபம் ஈட்ட வழி வகுக்கிறது. 5. **அதிக நிதி தர மதிப்பீடு -** தனியாள்

வணிகத்தைவிட கூட்டாண்மையில் கூட்டாளிகளின் வரையறாப் பொறுப்பினால் அதிக கடன் பெற வாய்ப்பு உள்ளது. மேலும் கூட்டாளிகள் நிதி நிறுவனங்களுக்கு அதிக பிணையங்களை அளித்து அதிக கடன் பெற வாய்ப்புள்ளது.

6. **விரைவான சிறந்த தொழில் முடிவுகள்** - கூட்டாண்மையில் பல கூட்டாளிகள் இருப்பதால் தொழில் பிரச்சனைகளை கலந்து ஆலோசித்து நல்ல முடிவுகளை எடுக்கமுடியும். எனவே ஒரு தீர்மானம் எடுக்கும் முன் எல்லாக் கூட்டாளிகளும் அப்பிரச்சனை பற்றி ஆராய்வர். ஆகையால் கூட்டாளிகளின் கூட்டறிவின் அடிப்படையில் சிறந்த முடிவுகள் அமையும்.எனவே அவசரத்தில் தவறான முடிவுகள் எடுப்பது தவிர்க்கப்படுகிறது.

7. **இடர்பாட்டில் பங்கேற்பு** - தனி நபர் வணிகத்தில் ஏற்படும் இடர்பாட்டை அவர் ஒருவரே ஏற்க வேண்டியுள்ளது. ஆனால் கூட்டாண்மையில் எல்லாக் கூட்டாளிகளும் தொழிலின் இடர்பாட்டை பகிர்ந்து கொள்கின்றனர். கூட்டாளிகள் தாங்கள் எற்றுக்கொள்ளும் இடரின் அளவு குறைக்கப்படுகிறது. இது வியாபார வளர்ச்சிக்கு உதவுகிறது. 8. **முயற்சிக்கும் பலனுக்கும் நேரடி தொடர்பு** கூட்டாண்மையில் கூட்டாளிகள் எவ்வளவுக்கெவ்வளவு உழைப்பு நல்குகின்றனரோஅவ்வளவுக்கு இலாபம் அதிகரிக்கும். எனவே கூட்டாளிகள் கடினமாக உழைத்து அதிக இலாபத்தைப் பெறுகிறார்கள்.

9. **சிறுபான்மையரின் நலன் பாதுகாத்தல்** - தொழில் சம்பந்தப்பட்ட முக்கிய முடிவுகள் அனைத்தும் கூட்டாளிகளின் ஒருமனதான உடன்பாட்டுக்குப் பின்னரே முடிவு செய்யப்படும். இதனால் சிறுபான்மைக் கூட்டாளிகளின் நலன்களைப் பெரும்பான்மைக் கூட்டாளிகள் புறக்கணிக்க முடியாது. இவ்வாறு சிறுபான்மையோர் நலனும் கூட்டாண்மையில் நன்கு பேணப்படுகிறது.

10. **நெகிழ்வுத்தன்மை** - கூட்டாளிகள் தாங்கள் விரும்பிய வண்ணம் தொழிலின் தன்மையை மாறும் தேவைக்கேற்றவாறு மாற்றிக் கொள்ளலாம். விலைக் கொள்கை, முதல், இலாப பகிர்வு விகிதம் முதலியனவற்றை கூட்டாளிகள் தங்கள் இசைவின் பேரில் மாற்றிக் கொள்ளலாம்.

11. **நேரடி மேற்பார்வை** - கூட்டாண்மையில் கூட்டாளிகள் நேரடியாக பங்கேற்பதால் தேவையற்ற செலவுகள் தவிர்க்கப்படுகிறது. பணியாளர்களிடம் நேரடி தொடர்பு உள்ளதால் அவர்களை ஊக்குவித்து அதிக உற்பத்திக்கு வழிவகுக்கிறார்கள். எனவே கூட்டுப்பங்கு நிறுமத்தைக் காட்டிலும் கூட்டாண்மையில் நிர்வாக செலவுகள் குறைக்கப்படுகிறது.

12. **எளிதான கலைப்பு** - கூட்டாளிகளின் நொடிப்பு நிலை, புத்தி ஸ்வாதீனமின்மை, இறப்பு முதலியவற்றால் கூட்டாண்மையை கலைக்க நேரிடும். விருப்ப முறிக் கூட்டாண்மையில் கூட்டாளி ஒருவர் மற்றக் கூட்டாளிக்கு அறிக்கை விடுத்து கூட்டாண்மையைக் கலைக்கலாம். சட்டப்படியான நடவடிக்கைகள் கூட்டாண்மைக் கலைப்பிற்கு அவசியம் இல்லை.

13. **சிறந்த மக்கள் தொடர்பு** - கூட்டாண்மை நிறுவனத்தில் அதிக கூட்டாளிகள் இருப்பதால் பணியாளர்கள், நுகர்வோர்,அரசு மற்றும் பொதுமக்கள் ஆகியோருடன் நேரடி தொடர்பு ஏற்படுவதற்கு உதவுகிறது. இதனால் வியாபாரத்தின் நற்பெயர் மேலும் உயருகிறது.

43.அ அடிப்படை	பங்குகள்	கடனீட்டுப்பத்திரங்கள்
பொருள்	ஒரு நிறுமத்தில் பங்கு முதலீல் ஒரு சிறு கூரே பங்காகும் எனவே பங்குநர் நிறுமத்தின் உரிமையாளர் நிலையில் இருக்கிறார்	கடனீட்டுப்பத்திரங்கள் நிறுமத்திற்கு கொடுத்த கடனை உறுதிபடுத்தும் சான்றாகும்கடன் பத்திரதாரர் நிறுமத்தின்கடனாளர்ஆகிறார்
இலாபத்தை வழங்குதல்	போதுமா லாபம் ஈட்டினால் மட்டுமே பங்குனர் கட்குபங்காதாம் வழங்கப்படும்.	குறிப்பிட்ட கால இடைவெளிகளில் லாப நட்டத்தை கருதாமல் கடனீட்டு பத்திரத்தின் மீது வட்டி வழங்கப்படுகிறது.இயக்குநர் முடிவால்இதனை மாற்ற முடியாது
இலாபத்தின் அளவு	முற்றுரிமை பங்கட்கு குறிபிட்ட விதத்தில் நிலையான பங்காதயம் ஆனால் நேர்மை பங்குகட்கு கொடுக்கப்படும் பங்காதாய விகிதம் லாபத்திற்கேற்ப மாறக்கூடியது	குறிப்பிட்ட விதத்தில் வட்டி செலுத்தப் பெறும் இலாத்தின் அளவை ஒட்டி வட்டிவீதம் மாறாது.
இயக்குநர் ஒப்புதல்	லாபம் ஈட்டுறுப்பினும் இயக்கநர்அவை பரிந்துறைத்து ஆண்டுபொதுக் கூட்டத்தில் தீர்மானத்தின் மூலம் விளம்பப்பட்டால் மட்டுமே பங்காதாயம் வழங்கப்படும்	கடனீட்டுப்பத்திர வட்டி செலுத்துவதற்கு எவருடைய பரிந்துறையும் ஒப்பதலும் வேண்டியதில்லை
லாபத்தை வழங்குதல்	பங்காதாயம் லாபப்பகிர்வு ஆகும்	கடனீட்டுப்பத்திரவட்டி லாபத்தின் மீதான செலவாகும்.
பொறுப்பு	பங்குநர் ஒருவர் பொறுப்புதான் வைத்துள்ள பங்குகள் மீது செலுத்த பெறதிருக்கும் தொகை அளவே ஆகும்.	ஆத்தகைய பொறுப்பு ஏதும் கடனீட்டு பத்திரதாரர்களுக்கு இல்லை
வட்டத்தில் வெளியிடுதல்	நிறுமச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுதான் நிறுமம் பங்குகளை வட்டத்தில் வெளியிடலாம்	கடனீட்டபத்திரங்களைவட்டத்தில் வெளியிட அத்தகைய நிபந்தனைகள் ஏதுமில்லை
சொத்துகள் மீது பிணை	நிறுமச் சொத்துகள் மீது பங்குநர்கட்கு ஈடுஏதுமில்லை	கடனீட்டு பத்திரங்கள் பொதுவாக சொத்துகள் பிணையாக பெற்றிருக்கும்

43.ஆ. செபியின் பணிகள் : 1.பங்குமாற்றகங்களின் வியாபாரத்தை ஒழுங்கு படுத்துதல். 2.இடைத்தரகர்களான பங்கு தரகர்கள் துணைத்தரகர்கள் வெளியிட்டு வங்கியர் ஒப்புறுதியாளர்கள் மற்றம் பத்திர சந்தையுடன் தொடர்புடைய மற்ற இடைத்தரகர்களின் செயல்பாடுகளை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்ததல் 3.பரஸ்பர நிதியங்கள் உள்ளிட்ட முதலீட்டு நிறுவனங்களை பதிவு செய்து ஒழுங்கு படுத்ததல். 4.சுயகட்டுப்பாடு நிறுவனங்களை தோற்றுவித்தலும் ஒழுங்குபடுத்ததலும் 5.பத்திர சந்தையில் மோசடியான மற்றும் நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளை தடை செய்தல் 6.முதலீட்டாளர்களிடையே விழிப்புணர்ச்சியை வளர்த்தர் மற்றம் இடைத்தரகர்களுக்கான பயிர்ச்சியளித்தல் 7.பத்திரங்களுக்கான உள்வணிகத்தை தடைசெய்தல் 8.பங்குகளை கணிசமான அளவில் வாங்கி நிறுமங்களை எடுத்தக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்ததல் 9.பங்குமாற்றகங்களிலிருந்து ஆகியவற்றின் அமைப்பு போன்ற விவரங்கள் பெறுவது பங்கு மற்றகங்களின் பரிசோதனை செய்தல் விசாரணை மற்றும் தணிக்கை செய்தல் 10.மத்திய அரசால் ஒப்படைவு செய்யப்பட்ட பணியிணை செய்தல்

44.அ. இயக்குநர் குழுக் கூட்டங்கள் பல பொருட்களைத் தீர விசாரித்து, ஆய்ந்து முடிவெடுக்க நேரமின்மையால், நிறுமச் செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்குமாயின், இயக்குநர் குழு ஒன்றை அமைத்து குறிப்பிட்ட பொருள் குறித்து ஆழ்ந்து ஆராய்ந்து முடிவுகளைத் தெரிவிக்க அல்லது குறிப்பிட்ட செயல் மேற்கொள்ள கோரலாம். எடுத்துக்காட்டாக, கீழ்க்கண்ட அதிகாரங்களை இயக்குநர் குழுக்களிடம் ஒப்படைவு செய்யலாம்.

1) கேட்டவுடன் செலுத்த வேண்டியிராத பிற முறையில் பணம் கடன் வாங்கும் அதிகாரம்

2) நிறும நிதிகளை முதலீடு செய்யும் அதிகாரம்

3) கடன் வழங்கும் அதிகாரம்

கடனீட்டுப் பத்திரதாரர் கூட்டம் கடனீட்டுப் பத்திரதாரர்கட்கு வழங்கியுள்ள பிணைகளை (ஈடுகளை) மாற்ற நிறுமம் விழையும்போது அல்லது அவர்களின் உரிமைகளில் அல்லது செலுத்த வேண்டிய வட்டி வீதத்தில் மாற்றம் செய்ய நினைக்கும்பொழுது, அன்னார்தம் கூட்டங்கள் கூட்டப்படும். **கடனாளர் கூட்டங்கள்** கடனாளருடன் (கடன் அடைப்புத் தொடர்பான) ஏற்பாட்டுத் திட்டம் ஒன்றை செய்துகொள்ள விழையும்பொழுது கடனாளர் தம் கூட்டம் கூட்டப்பெறும்.

44.ஆ இந்தியாவில் கூட்டுறவு இயக்கம்: கூட்டுறவு என்னும் கருத்து நமது நாட்டுக்கு புதுமையானது அல்ல. பழங்காலம் தொட்டு நமது ஊரகப் பொருளாதாரம் நாட்டுப்புறங்களிலுள்ள மக்கள் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்ற அடிப்படையிலேயே எழுந்தது. ஊரில் நடைபெறும் அனைத்துச் செயல்களிலும் ஊரக மக்கள் கூட்டுறவு உணர்வோடுதான் பங்கெடுத்து வந்திருக்கிறார்கள். சாணக்கியரின் அர்த்தசாஸ்திரத்திலும் நமது நாட்டில் அன்று நிலவிய கூட்டுறவு உணர்வு பற்றி ஆங்காங்கு சொல்லப்பட்டுள்ளது. (பிரிட்டிஷ்காரர்கள்) வெள்ளையர்கள் நமது நாட்டில் ஆட்சி செலுத்தத் துவங்கியநாள்தொட்டு, நமது பண்டைய ஊரக மேலாண்மை முறை மங்கி மடியத் தொடங்கியது. ஆனால் நவீன கூட்டுறவு இயக்கம் 1904-ம் ஆண்டில் நமது நாட்டில் தோற்றம் பெற்றது. அன்று நாட்டுப் புறங்களிலும், நகரங்களிலும் வாழ்ந்து கொண்டிருந்த உழவர்கள், கைவினைஞர், தொழிலாளிகள் போன்றோர் வட்டிக் கடைக்காரர்களின் கொடும்பிடியில் அகப்பட்டு அவதியுற்றனர். ஊரகக் கடன் சுமை கொடும் நஞ்சுபோல் ஏறிக்கொண்டிருந்தது. உழவர்கள் சொல்ல இயலாத் துயர்பட்டு வந்தனர். வேளாண்மை நலிவுற்று வந்தது. ஜெர்மனி நாட்டில் கடன் கொடுப்போரின் கொடும்பிடியிலிருக்கும் ஊரக மக்களை உய்வித்து வெற்றிவாகை சூடிய கூட்டுறவு ஊரக நாணயச் சங்கங்களை ஏன் நமது நாட்டிலும் துவங்கி நம் மக்கள் படும் துயர் துடைக்கக்கூடாது எனக் கருதிய தமிழக அரசு அதன் ஐ.சி.எஸ் அலுவலரான திரு. பிரடரிக் நிக்கல்சன் என்பவரை அந்நாட்டுக்கு அனுப்பி அங்கு இயங்கிவந்த கூட்டுறவு ஊரக வங்கிகளின் அமைப்பு, செயல்முறை, அவற்றை நமது நாட்டில் துவக்குவதற்கான சாத்தியக் கூறுகள் ஆகிய செய்திகளை ஆய்ந்தறிந்து வருமாறு செய்தது. இந்தியாவிலும் அத்தகைய ஊரக நாணயச் சங்கங்களைத் துவக்கலாம் எனப் பரிந்துரைத்து 1895-ம் ஆண்டு அவர் அறிக்கை சமர்ப்பித்தார்.

இதன் பயனாக மைய அரசு 1904-ம் ஆண்டு நாணயக் கூட்டுறவுச் சங்க சட்டம் இயற்றிக் கூட்டுறவு இயக்கத்துக்கு நமது நாட்டில் அடித்தளம் போட்டது. ஊரக மக்களுக்கு குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கும் நோக்கத்தோடு நாணயக் கூட்டுறவுச் சங்கங்கள் பல இச்சட்டத்தின்கீழ் துவக்கப்பட்டன. நாணயச் சங்கங்கள் தவிர, பிறவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவும், கூட்டுறவு மைய வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கி போன்றவை நிறுவவும் இச்சட்டம் வழிவகை செய்யவில்லை. எனவே இந்திய அரசு கூட்டுறவுச் சங்கச் சட்டம் என்ற விரிவான சட்டத்தை 1912-ம் ஆண்டு இயற்றி வெவ்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்களையும், கூட்டுறவு இணையங்களையும் துவக்குவதற்கு வகைசெய்தது. 1919- ம் ஆண்டு கூட்டுறவு என்னும் பொருள் மாநில அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பொருளாக மாறியதை அடுத்து, பல மாநில அரசுகள் அந்தந்த மாநிலங்களில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களை ஒழுங்குபடுத்தும் நோக்கத்தோடு தனித்தனியாகக் கூட்டுறவுச் சட்டங்கள் இயற்றிக் கொண்டன. அன்றைய தமிழக அரசும் தமிழ்நாட்டுக் கூட்டுறவுச் சட்டத்தை 1932-ம் ஆண்டு இயற்றியது. இச்சட்டத்தை 1961-ம் ஆண்டு மாற்றியமைத்தது. இன்று தமிழகத்தில் இயங்கிவரும் கூட்டுறவுச் சங்கங்களைக் கட்டுப்படுத்தி வருவது அதன் 1961-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்க சட்டமாகும்.

45 அ	பொருள்	கூட்டாண்மை	கூட்டுப்பங்கு நிறுமம்
1)	சட்டம்	1932	1956
2)	பதிவுசெய்தல்	கட்டாயமன்று.	கட்டாயமாக்கப்பாட்டுள்ளது
3)	பங்கு மாற்றம்	மாற்றித்தரஇயலாது.	மாற்றக் கூடியவை.
4)	மேலாண்மை	அனைத்துகூட்டாளிகள்	இயக்குனர் அவை
5	நீடித்தவாழ்வு	நிலையற்றது	நிலையானது
6	பொறுப்பு	கூட்டு மற்றும் தனி	வரையறு
7	தணிக்கை	விருப்பம்	சட்டப்படி
8	எண்ணிக்கை	குறைந்தது 2 அதிகம் வங்கி 10 பிறதொழில் 20	தனி 2 பொது 7 தனி 50 பொது வரையறையில்லை
9	உறுப்பினராதல்	தனிநபர் மட்டுமே	நிறுமமே ஒரு நிறுமத்தை வாங்கலாம்
10	கலைப்பு	எளிது	சட்டப்படி

45.ஆ நிறுமச் செயலரின் கடமைகள்:
சட்ட முறைக்கடைமைகள் : 1.எச் சட்டத்தின் கீழாவது உண்மையென சான்றளிக்க வேண்டியிருப்பின் அத்தகைய ஆவணத்தில் கையொப்பமிடல் 2.தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை தக்கல் செய்ய 3.நிறுமத்தின் பதிவலுவலகம் உள்ள இடம்குறித்த அறிக்கையைத்தாக்கல் செய்ய 4.தொழில் தொடக்கச் சான்றிதல் பெற சட்டமுறை உறுதிவிலம்பல் செய்தலும் அவற்றை பதிவாளரிடம் தக்கல் செய்தலும். 5.நிறுமத்தின் ஆண்டறிக்கையில் கையப்பமிடல் **பொதுக் கடமைகள் :** 1.தன்னுடைய கமைகளை மிகுந்த கவனத்துடனும் நேர்மையுடனும் தன் அதிகார எல்லையை மீறாது செயல்படலும். 2.இரகசியமான செய்திகளை வெளியிடாது காத்தல்.

46.அ. பங்குமாற்றகத்தின் நன்மைகள் :
நிறுமத்திற்கு நன்மைகள்: 1. பங்கு மாற்றகம் கையாளும் பங்குகளுக்குரிய நிறுமங்களின் மதிப்பு உயரும். நிறுமம் வலுவானது என்ற எண்ணம் உருவாகும். 2. நிறுமங்களின் பங்குகளுக்கு பரந்த சந்தை கிடைக்கிறது. 3. நிறுமம் வேறொரு நிறுமத்தோடு இணைக்கப்படும்போது சாதகமான பேரத்தை பெற உதவி செய்கிறது. 4. ஊக வணிகர்களின் செயல்பாட்டினால் பட்டியலிடப்பட்ட பத்திரங்களின் விலைகளில் அடிக்கடி ஏற்படும் ஏற்ற தாழ்வுகள் குறைகின்றன.

46.ஆ. கூட்டுறவுஅமைப்பின் குறைபாடுகள்: 1) திறமையற்ற மேலாண்மை:கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள் அமைப்பை மேலாண்மை செய்யப் போதுமான திறமையும் அனுபவமும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். திறமையுள்ள அனுபவமிக்க நபர்களை பணியில் அமர்த்த இயலாது. **2) ஒற்றுமையின்மை:** சில வேலைகளில் உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஒற்றுமையாய் இருப்பதில்லை. இதனால் கூட்டுறவு அமைப்பின் வியாபாரம் பாதிக்கப்படுகிறது. **3) உரிமையை மாற்ற இயலாமை:** கூட்டுறவுச் சங்கத்தின் பங்குகள் மாற்றியல்பு கொண்டவை அல்ல. சங்கத்திலிருந்து விலக விரும்புவோர் பங்குகளைத் திருப்பிக்கொடுத்து பங்கு முதல் தொகையைத் திரும்பப் பெறலாம். **4) கடன் வசதியின்மை:** உறுப்பினர்களுக்கு நுகர்வோர் கூட்டுறவு சங்கத்தில் கடன் வசதியளிப்பதில்லை. சரக்குகளை ரொக்கம் கொடுத்து வாங்க உறுப்பினர்கள் விரும்புவதில்லை.

47.அ) துறைவாரி அமைப்பின் நிறைகள்: 1. முழுமையான அரசு கட்டுப்பாடு: அரசின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்குபவை, எனவே, செயல்பாடுகளை சரியான வழியில் கட்டுப்படுத்த முடியும். 2. மேலாண்மை: அரசு அலுவலர்கள் மேலாண்மை செய்வதால் உண்மையாகவும் திறம்படவும் உழைப்பர். 3. அரசுக்கு வருவாய் ஈட்டுகிறது: வியாபார நோக்கில் செயல்பட்டு அரசுக்கு வருவாய் பெருக்கி, அது சமூக வளர்ச்சிப் பணிகளுக்காக செலவிடப்படும். 4. அரசின் கொள்கைகள்: அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இந்நிறுவனங்கள் செயல்படுத்துகின்றன. 5. இரகசியம் காத்தல்: அணுசக்தி, பாதுகாப்புத் தொழில்களின் கொள்கைகள் மற்றும் செயல்பாட்டினை பற்றிய இரகசியங்களை பாதுகாத்து வைக்க இதுவே தகுந்த அமைப்பு. 6. குறிப்பிட்ட தொழில்களுக்கு ஏற்ற அமைப்பு: பொதுச் சேவை சார்ந்த, நீண்ட தொடக்க காலம் கொண்ட தொழில்களுக்கு ஏற்ற அமைப்பு. 7. பதில் சொல்லும் கடமை: செயல்பாடுகளை பற்றி பாராளுமன்றத்திலோ, சட்டப் பேரவையிலோ அது தொடர்புள்ள அமைச்சரகம் பதில் கூற வேண்டும். எனவே, மக்கள் நலன் காக்கப்படும்.

47.ஆ. முன்னுரிமைப் பங்குகள்
1. குவி முன்னுரிமைப் பங்குகள் 2. குவியா முன்னுரிமைப் பங்குகள் 3. எஞ்சியதில் பங்கேற்கும் முன்னுரிமைப் பங்குகள் 4. எஞ்சியதில் பங்கேற்கா முன்னுரிமைப் பங்குகள் 5. மாற்றிக் கொள்ளக்கூடிய முன்னுரிமைப் பங்குகள் 6. மாற்றிக் கொள்ள முடியா முன்னுரிமைப் பங்குகள் 7. மீளதகு முன்னுரிமைப்பங்குகள் 8. மீட்கமுடியா முன்னுரிமைப் பங்குகள் **(ஏதேனும் 5 விளக்கத்துடன்)**